Mr Modas Moran

Registered as a News Paper in Sri Lanka, பக்கங்கள்; 04 விலை ரூபா: 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 11 (27 - 07 - 1991) சனிக்கிழமை ஓசை: 159

கூடுதல் மாணவருக்கு மகாப்பொல பரிசில்

(கொழும்பு)

மகாபொல புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கூடுதலான மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என வர்த்தகத் துறை அமைச்சு அறிவித்துள்ளது. தற்போது 23,000 மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது என்றும், இனிமேல் இத்தொகை அதிகரிக்கப்படும் என்றும், கல்வி அமைச்சுடன் (4 ஆம் பக்கம் பார்க்க)

தாக்குதல் உக்கிரத்தைப் பார்த்ததும்

எனக்கு இனி மீட்சி இல்லை என நினைத்தேன்

சிங்கள சிப்பாயின் சிறப்புப் பேட்டி

(யாழ்ப்பாணம்)

“நீங்கள் மேலதிகப் படைதான். நீங்கள் சண்டையில் இறங்க வேண்டிய தேவையில்லை என்று சொல்லியே எங்களைக் கட்டைக்காட்டில் கொண்டு வந்து இறக்கினார்கள்- இறக்கிய பின்னரே சண்டைக்குப் போகவேண்டும் என எமக்குப் பணிக்கப்பட்டது. இச்சண்டையில் புலிகளின் தாக்குதலின் உக்கிரத்தைப்பார்த்ததும் இனி எனக்கு மீட்சியில்லை என நினைத்தேன்” இவ்வாறு கூறினார் கட்டைக்காட்டு மோதலில் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் கெமுனு படைப்பிரிவைச் சேர்ந்த உபாலி என்னும் சிப்பாய்

நேற்றிரவு ஈழநாதம் நிருபருக்கு அவர் அளித்த விசேட பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது, காலி மாவட்டம் ஜிந்தோட்டை ரத்னமவத்தையைச் சேர்ந்த நான் டபிள்யூ எல் ஜோன் எப்பவின் மகனாவேன். எனக்கு இரண்டு ஆண் சகோதரர்களும் மூன்று பெண் சகோதரிகளும் உள்ளனர் குடும்பத்தில் நானே கடைசிப்பிள்ளை எமது குடும்பத்தின் வறுமையின் துன்பம் தாளாமலே இராணுவத்தில் சேர்ந்த எனக்கு மாதுரு ஓயாப் பகுதியில் மூன்றுமாதம் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சியின்போது எனக்கு வழங்கப்பட்ட இலக்கம் 43134 இரண்டுவருடம் மூன்று மாதம் இராணுவத்தில் கடமையாற்றியுள்ளேன்.

தற்போது எனக்கு 3500 ரூபா சம்பளம் கிடைக்கிறது பயிற்சி எடுத்ததும் இரத்தினபுரியில் கடமையாற்றினேன் இங்கு வருவதற்கு முன்னர் திருமலையில் மூன்று மாதம் கடமை புரிந்தேன். திருமலையிலிருந்துதான் இங்கு கொண்டுவரப்பட்டேன். அப்போது நீங்கள் மேலதிகப்படைதான் சண்டையில் இறங்கவேண்டிய தேவை இல்லை. என்று கூறித்தான் இங்கு கொண்டு வந்தனர். இங்கு வந்த பின்னரே சண்டையில் இறங்குமாறு பணிக்கப்பட்டேன் கொத்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

வீரவணக்கம்

தேவா

(நமது நிருபர்)

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணி பகுதியில் கடந்த புதன்கிழமையன்று (24-07-91) நடந்த மோதலில் காயப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த தேவா சி. சந்திரமோகன், வாகரை, மட்டக்களப்பு) நேற்றுவெள்ளி அன்று வீர மரணத்தைத் தழு

(8 ஆம் பக்கம் பார்க்க)

நரசி மராவ் விஜயம் ரத்து

(புதுடில்லி)

பெருந்தலைவர் காமராசர் பிறந்ததின நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும், காவிரி நதி நீர் பிரச்சினை தொடர்பாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுடன் பேசவும் திட்டமிட்டிருந்த இந்தியப் பிரதமர் பி வி நரசிம்மராவ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுதந்திரக் கட்சியின் பணம் புலிகளிடம்

- ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி வழங்கிய பணத்தின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளின் ஆயுதம் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்த பட்டுள்ளது என்ற சந்தேகம் எழுந்துள்ளது இவ்வாறு அவசர காலச் சட்ட நீடிப்பு தொட

(4 ஆம் பக்கம் பார்க்க)

திருத்தம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில், கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் 14ஆம் திகதி 139 போராளிகள் வீரமரணமடைந்ததாக நேற்று வெளிவந்த பட்டியல் தவறானது 14ஆம்—22ஆம் திகதிகளுக்கிடையில் 139 போராளிகள் வீரமரணமடைந்தார்கள் என்பதே சரியானது.

அத்துடன் இல்மன் (வேலன்) தனராஜ், உப்புக்குளம் வீதி, ஊர்காவற்றுறை என்பவரின் பெயர் தவறுதலாக இடம் பெற்றுவிட்டது. ஆனையிறவுப் போரில் கலந்து கொண்ட இவர் காயமடைந்த நிலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் ஆரோக்கியமாக உள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானக் குண்டுவீச்சு தொடர்கின்றது

கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று 17 வது நாள் போரில் பாரிய மோதல் எதுவும் இடம்பெறவில்லை. அதேவேளை சிறிலங்கா வான்படை குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது. அதேவேளை கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பகுதியில் இருந்து எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இன்று ஹரோல்ட் ஹெரத் இந்திய விஜயம்

சிறிலங்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹரோல்ட் ஹெரத் நான்கு நாட்கள் சுற்றுப் பயணமாக இன்று இந்தியா செல்லவுள்ளார் என்று வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகத்திலும், பொருளாதாரத் துறையிலும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான இந்திய- இலங்கை கூட்டுக் கமிஷன் ஒன்றை அமைப்பது பற்றிய உடன் படிக்கையொன்றில் கைச்சாத்திடுவார் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

ஹரோல்ட் ஹெரத் இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கியுடனும், நிதி அமைச்சர் மன்மோகன்சிங், பிரதம மந்திரி பி. வி. நரசிம்மராவ், வர்த்தக அமைச்சர் ப. சிதம்பரம்ஆகியோருடனும் பேச்சுக்கள் நடத்துவார்

புலிகளுக்கு ஆயுத உதவி; அரசாங்கம் வழங்கியதாக சிறிமாவோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் இராணுவ உதவிகள் வழங்கியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார் அவசர காலச் சட்டம் நீடிப்பு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஒத்துழைக்குமாறு ம. முன்னணி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

போர்முனையில் காயமுற்று மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போராளிகளுக்கு வேண்டிய மெத்தைகள், தலையணைகள், இளநீர், படுக்கை விரிப்புகள், பழந் துணிகள் போன்றவற்றை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவ இயக்கத்தைச் சேர்ந்தோர் வீடு வீடாகச் சேகரிக்க உள்ளனர். அவர்களுக்குத் தாராளமாக வழங்கி உதவும் வண்ணம் வேண்டுவதாக விடுதலைப்புலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடற்படைச் சடலங்கள் 6 ஆக உயர்வு

(புங்குடுதீவு)

சிறிலங்கா கடற்படையின் மற்றுமொரு சடலம் புங்குடுதீவு அரசினர் வைத்திய சாலைக்கு அருகாமையில் கரை ஒதுங்கியது. புதன்கிழமையன்று பகல் இரு சடலங்கள் கரை ஒதுங்கியதைத் தொடர்ந்து அன்றிரவு மேற்படி சடலம் கரை ஒதுங்கியது இதே போன்று மற்றொரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

காவிரி நீர்ப் பிரச்சினை; நாடாளுமன்றக் குழப்பம்

(டில்லி)

காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பைச் செயற்படுத்துவது சம்பந்தமாக டில்லியில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நேற்றுக் கூச்சலும், குழப்பமும் நிலவியது. இரு அவைகளிலும் கேள்வி நேரத்திற்குப் பின் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பைப் புறக்கணிக்கும் வகையில் கர்நாடக அரசு அவசர சட்டம் ஒன்றை நிறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

‘பெரும்படை இருப்பின் துரத்தி பிடித்திருப்போம்’

- ஆஞ்சநேயர்

களத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளைப்பார்க்கையில் எமக்கென்று ஒரு பெரும் படையணி ஒன்று இருந்திருக்குமானால் கட்டைக்காடு- வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கி ஆனையிறவு முகாமை நோக்கி வந்த படையினரை நாம் துரத்தியே பிடித்திருக்கலாம் என்ற உணர்வே என்மனதில் ஏற்பட்டது இவ்வாறு தெரிவித்தார் கட்டைக்காடு- வெற்றிலைக்கேணிப்பகுதியில் நடைபெற்ற மோதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப்பிரிவின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் அவர்கள்.

போர்க்களத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளைப் பற்றி அவர

(2 ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர் பாடசாலை
ஆசிரியர் பயிற்சி நிலையம் மூளாய்
Institute of Nursery Studies Moolai

✶ ஆகஸ்ட் 5ஆம் திகதி (5-8-1991) மேற்படி பயிற்சி பெரியபுலம் மகாவித்தியாலயம் நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணத்தில் தொடங்கி செப்டம்பர் 5ஆம் திகதி (5-9-1991) முடிவடையும்

1. இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர்
2. 1989ஆம் ஆண்டுக்கு முன் பயிற்சி எடுத்து சித்தியடையாதோர்
3. 1989ஆம் ஆண்டுக்கு முன் முழுமையான பயிற்சி எடுத்து பரீட்சை எடுக்க தவணை பெறாதோர்
4. 1990ஆம் ஆண்டு பயிற்சி எடுக்க தொடங்கி (சண்டிலிப்பாய் தெல்லிப்பளை உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உட்பட) முடிக்காதவர்கள்;
5. 1991ஆம் ஆண்டு பயிற்சி எடுக்க தொடங்கி (வேலணை; ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு உட்பட) முடிக்காதவர்கள் யாவரும் இப்பயிற்சியில் பங்குபற்றி பயிற்சி நிலையத்தினால் 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடாத்தும் பரீட்சையில் தோற்றி சித்தியடையும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சித்தியடைந்தோருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
6. சங்கானை, ஊர்காவற்றுறை, கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பயிற்சி எடுத்து 1990ஆம் ஆண்டு எமது பயிற்சி நிலையத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயிற்சி ஆசிரியர்கள் (Master Teaches)

மேற்கூறப்பட்ட சகலரும் ஆகஸ்ட் 4ஆம் திகதி (04-08-1991) காலை 9-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணிவரை மேற்படி பாடசாலையில் பெயர்களை பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்;

இயக்குநர்
சிறுவர் பாடசாலை பயிற்சி நிலையம் மூளாய்

(B-2847)

3-ம் ஆண்டு நினைவலைகள்

லெப்ரினன்ட் "ராஜு"
(சிவஞானசுந்தரம் ஐங்கரன்)

தாயகத் தாய் மடியில்:
29-05-1968

தமிழீழத்தாய் விடிவில்:
27-07-1988

மனைமக்கள் மகிழ் சுற்றம் என மிக்க சிறுவட்டத்தினில் வைத்த கவனிப்பை துறவிட்டெம் இடையுற்ற அடிமையாய் அடிபட்ட பல மக்கள் அழுகைக்கும் தொழுகைக்கும் அடிமைப்புன் நிலைமைக்கும் முடிவென்று புறப்பட்ட மறவனே மறவோம் நாம் உனை என்றும் உயிர்ப்பாய் நீ புதிதாகத் தமிழ் ஈழமலர்களில்.

"ஞானகிரி"
ஐங்கரன் வீதி,
அளவெட்டி.

குடும்பத்தினர், சுற்றத்தவர்,
நண்பர்கள்.

(B/2834)

விளம்பரம்

மணமக்கள் தேவையா?

எம்மிடம் மணமக்கள் நிறைய இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கலாம். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம்.

(R/1581)

ஒத்திவைப்பு
(யாழ். விளையாட்டு நிருபர்)

நொதேர்ன் ஸ்போர்ட்ஸ் சஞ்சிகையின் ஆதரவில் நேற்று வெள்ளிக்கிழமை 'போரில் வெற்றிக் கிண்ணம்,' நொதேர்ண் ஸ்போட்ஸ் வெற்றிக் கிண்ணத்திற்காக நடைபெறவிருந்த நொக்கவுட்மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் யாவும் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (42)

தென்மராட்சியில் தெருக்கூத்து
(கொடிகாமம்)

தென்மராட்சிப் பகுதியில் திங்கள் முதல், இரவு நேரங்களில் தெருக்கூத்துகள் ஆடப்படுகின்றன;

மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் ஆதரவில் தென்மராட்சி இளைஞர்கள் போர் முரசு கொட்டி தெருக்கூத்துக்களை ஆடி வருவது குறிப்பிடத்தக்கது; (86)

பர்மாமீது அமெரிக்கா வர்த்தகதடை
(வாஷிங்டன்)

மியான்மா என்று அழைக்கப்படும் பர்மாவிற்கு எதிராக பொருளாதாரத்தடைவிதிக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. போதை மருந்து கடத்தலை தடுக்கத் தவறிவிட்டமைக்காகவும், பர்மாவில் நிகழும் மனித உரிமை மீறல்களுக்காகவும் இந்த தடையுத்தரவு விதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது;

நடமாட்டம் அதிகரிப்பு

மாதகல் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப் படகுகளின் நடமாட்டம் கடந்த சில நாட்களாக அதிகரித்துக் காணப்படுகிறது. காரைநகர் கடற்படை முகாமுக்கும், காங்கேசன்துறை துறைமுகப் பகுதிக்குமிடையிலேயே இவற்றின் ரோந்து நடவடிக்கை அதிகரித்துள்ளது. இதனால் இப்பகுதி மீனவர்கள் பகல்வேளைகளில் கடலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்; (ச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூற விரும்புகிறீர்கள்? என நேற்றையதினம் எமது விசேட செய்தியாளர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஈழநாதம் செய்தியாளருக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது;

கிழக்கு மாகாணத்திலிருந்து வந்த இந்தப் படையணி அங்குள்ள நிலைமையைப்போல பெரும் எடுப்பில் கனரக வாகனங்களுடன் வந்தால் எமது முற்றுகையை உடைத்து விடலாம் என்று கருதியே எம் மண்ணில் காலடி எடுத்து வைத்தது. ஆனால் இங்கு எமது யுத்த முறைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கூடிய அளவு இழப்பை அப்படையணி சந்தித்தது.

(3ஆம் பக்கம் பார்க்க)

பொதுக்கூட்டம்

சகல தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களும் அவர்களது ஆசிரியர்களும் இன்று 27-7-91 (சனி) பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலைக்கு தவறாது வருகை தரவும்.

பொதுச்செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

(R/1582)

விதைகள் தேவை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு (T. R. R. O.) பின்வரும் விதைகள் தேவைப்படுகின்றன. இவற்றை விநியோகிக்கக் கூடிய விதைக் கமக்காரர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுக்கொள்ளுகின்றோம்.

தேவைப்படும் விதைகள்:-

பாசிப்பயறு, கௌபி, குரக்கன், எள்ளு, வெண்டி, கத்தரி, நீளப்பயற்றை, பாகல், புடோல், தக்காளி.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

செயலாளர்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்(T. R. R. O.)
106, நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(B/2861)

நினைவு கூருகின்றோம்...

1991-07-27

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய
கார்த்திக் (கார்த்திகேஸ்வரன் - நெடுந்தீவு)
பெரியதம்பனையில் தேசவிரோதிகளினால் வெட்டிக் கொல்லப்பட்ட
தீசன் (தம்பையா கணேஷ் - தம்பனை)
பூநகரி ஒல்லாந்தர் கோட்டையில் அமைந்திருந்த சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பின்போது வீரமரணமெய்திய
மேஜர் அசோக் (இராஜநாயகம் டேவிட் பாலச்சந்திரன் - உயிலங்குளம், மன்னார்)
லெப். சேகர் (செபமாலை சிறிதரன் - அடம்பன்)
லெப். துரைமணி (செபஸ்தியான் எட்வேட் - இசைமாலைத் தாழ்வு, முருங்கன்)
லெப். அலிபா (யோசப்-நறுவிலிக்குளம், மன்னார்)
2ஆம் லெப். ரகு (ராமசாமி விஜயேந்திரன் - வேப்பங்குளம், மன்னார்)
2ஆம் லெப். தம்பா (வின்சன்ற் பிரான்சிஸ் ஞானதீபன் - இளவாலை, யாழ்ப்பாணம்)
செந்தூரன் (சண்முகநாதன் தமிழேஸ்வரன் - உயிலங்குளம், மன்னார்)
1988 ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் இந்தியப் படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்ட நிலையில் மண்வெட்டியால் அடித்துக் கொலை செய்யப்பட்ட
லெப். ராஜு (சிவஞானசுந்தரம் ஐங்கரன் - அளவெட்டி வடக்கு, அளவெட்டி)
1989ஆம் ஆண்டு தண்ணீரூற்று ஆலடிச்சந்தியில் இந்தியப் படையுடனான மோதலில் வீரமரணமெய்திய
குமரன் (பிச்சை அன்பரசன் - அளம்பில்)
ஜெகன் (பத்மநாதன் சந்திரகுமார் - கிளிநொச்சி)
காரைநகரில் தேச விரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒருபெண் உட்பட மூன்று தமிழர்கள்
கந்தர்மடச் சந்தியில் தேச விரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்
1990 ஆம் ஆண்டு திரியாயில் தவறுதலாக இடம் பெற்ற வெடிவிபத்தில் எமைப்பிரிந்த
நிர்மல் (அப்துல்ரசாக் - புடவைக்கட்டு, - திருக்கோணமலை)
மோகன் (திருக்கோணமலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B- 2860)

❋ சிந்தனைக்கு ❋

கையாலாகாத்தனம் வெளித்தெரியும் போது தப்பிச் சொல்வது ஆட்சியாளரின் வழமையாகிவிட்டது.

— ஜோர்ஜ்கிரேப்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்; 27.07 1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 3200
த.பெ.எண் 05

சுதந்திரக் கட்சிபக்கம் பந்தை எறிய முயற்சி

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக தேசியப் பிரச்சினையில் அரசியல் தீர்வு காண்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்காவின் தனிநபர் பிரேரணையை விவாதிப்பதற்கு சிறிலங்கா அமைச்சரவை ஆதரவு தெரிவித்துள்ளது,

இந்தப் பிரேரணையை ஆதரித்துள்ள சிறிலங்கா அமைச்சரவை, வடக்கு - கிழக்குப் பிரச்சினையை ஆராய்வதற்கு கூட்டிய சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளத் தவறிய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இது வாய்ப்பு அளிப்பதாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஆனால், உண்மைநிலை அதுவல்ல, இராணுவ ரீதியான மேலாதிக்கம், அல்லது வெற்றி என்பன எட்டாத நிலையிலும், இராணுவம் பெரும் இக்கட்டில் சிக்கியுள்ள நிலையிலும், தமது கையில் உள்ள பந்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பக்கம் உருட்டி விடுவதற்காகவே ஐ.தே. கட்சி அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

வடக்கு கிழக்கில் இராணுவமேலாதிக்கம் இனிமேல் சாத்தியப்படப் போவதில்லை என சிறிலங்கா அரசாங்கம்தெளிவாக உணர்ந்துள்ளது. அதிலும் ஆனையிறவு தாக்குதல் எச்சசொச்சமாக இருந்த சபலங்களையும் தீர்த்து வைத்துவிட்டது. யுத்தம் பற்றிய பேச்சை நிறுத்திவிட்டு சமாதானம் பற்றியே பேச வேண்டும் என ஒரு சிரேஷ்ட அமைச்சர் குறிப்பிட்டதில் இருந்தே அரசாங்கம் யுத்தத்தில் நம்பிக்கை இழந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அதேவேளை, எதிர்க்கட்சிகளும் இராணுவ நடவடிக்கையில் நம்பிக்கையை இழந்துள்ளன என்பதை மங்கள முனசிங்காவின் பிரேரணையே எடுத்துக் காட்டுகின்றது. மேலும் சிங்கள மக்களும் போர் தொடர்வதை விரும்பவில்லை. தமது பிள்ளைகள் மீண்டு வந்தால் போதும் என கருதத் தொடங்கி விட்டனர். அரசாங்கத்திற்கு தமது கருத்தை வெளியிடவும் தொடங்கி விட்டார்கள்.

இவ்வாறு இராணுவ நடவடிக்கையால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை சகலரும் உணர்ந்துள்ள போதிலும் எதிர்கால அரசியல் இலாபம் கருதி அரசாங்கமோ, மற்றைய கட்சிகளோ அதற்குரிய தீர்வை முன்வைக்க முன்வரவில்லை. சுமார் ஒன்றரை வருடங்களாக நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் இனப்பிரச்சினைபற்றித் தீர்வு எதுவும் இதுவரை எட்டப்படவில்லை. தமிழ்க் குழுக்களுக்கும், முஸ்லிம் குழுக்களுக்கும் இடையில் பிரச்சினைகளையும், படுகொலைகளையும், நம்பிக்கையீனங்களையும் ஏற்படுத்திவிட்டு தற்பொழுது அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்மொழியுமாறு பந்தை அவர்கள் பக்கம் உருட்டி விட்டது. ஆனால் அவர்களால் முடிவு எதையும் எடுக்க முடியவில்லை. அவர்களுக்கிடையிலான முரண்பாடு தீர்வை எட்டவிடவில்லை.

அதேவேளை இத்தமிழ் / முஸ்லிம் குழுக்கள் விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் தீர்வை வழங்காவிட்டால் அரசாங்கம் ஒரு தீர்வை அறிவிக்கும் என சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் அவ்வாறு எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பக்கம் அரசாங்கம் பந்தை உருட்டி விட்டுள்ளது. அதன் தீர்வை விவாதிக்க ஒப்புக்கொண்டுள்ளது. சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருந்ததனால் இனப்பிரச்சினையின் கருத்தோட்டம் எவ்வாறானதாக உள்ளது என்பதை வெளிப்படையாக அறியமுடியாது இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு மங்களமுனசிங்காவின் பிரேரணை பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

ஆனால், ஒன்றுமட்டும் தெளிவு. தமிழர் பிரச்சினைக்கு தமிழரைத் திருப்திப்படுத்தக்கூடிய தீர்வு எதையும் மங்கள முனசிங்கவோ சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ வைக்கப் போவதில்லை. எதுவித அதிகாரமும் அற்ற மாகாணசபைகளே தமிழீழக் கோரிக்கைக்கு வித்திடுகின்றது எனப் புலம்பியவர்கள் அவர்கள். இந்நிலையில் தமிழரைத் திருப்திப்படுத்தக்கூடிய எதையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வைத்துவிடப் போவதுமில்லை; அதனால் ஐ.தே கட்சி இலாபம் எதையும் ஈட்டிவிடப் போவதுமில்லை.

இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஒன்றை நாம் தெளிவுபடுத்திக் கூறிவிடலாம். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது காலம் கடந்த சிந்தனை. தற்பொழுதும் அரசியல்தீர்விற்கான காலம் கடந்துவிடவில்லை. மேலும், மேலும் காலம் கடத்துவது சிக்கல்களை மேலும் வளர்ப்பதாக அமையுமே ஒழிய தீர்வாக அமைய மாட்டாது. அதனை விளங்கிக் கொள்ள இலங்கையின் வரலாறே போதுமானதாகும்.

விடிவுக்கான பூபாளங்கள்

ஆனையிறவு போர்க்களத்திற்கு வெளியே - 4

துரையன்

... மழைத்துளி போன்ற துப்பாக்கிக் குண்டுகள், பொம்மர் குண்டுவீச்சு, ஹெலிச்சூடு, அவ்றோ குண்டுவெடிப்பு...... இவைகளுக்கு மத்தியில் தமிழ்ப் போராளிகள்... ...

... ... ஆங்கிலப் படங்களில் பார்த்து, இரசித்து கைதட்டிய காட்சிகள்...... இப்போது நேரில் பார்க்கின்றோம்... ...

... கைதட்டி ஆரவாரிக்க முடியுமா? ... ... சில நிமிடங்கள் இருவரும் மௌனமாக நிற்கின்றோம்.

குறுக்கு வீதியில் வந்த மூவர் பிரதான வீதியில் மிதந்து நாங்கள் நிற்கும் இடத்தை நோக்கி வருகின்றனர்.

ஒருவர் சைக்கிளை உருட்டுகிறார். சைக்கிளின் கரியலில் ஒரு சருவம் வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சருவத்தை இருவர் பிடித்திருக்கின்றனர். எங்களை அண்மித்த அவர்கள் சைக்கிளிலிருந்து சருவத்தை இறக்கி வைக்கின்றனர்.

"தம்பி... ஆனையிறவுக்குப் போற வாகனங்கள் வரும்... அதிலை இந்த சருவத்தை அனுப்பிவிடுங்கோ ..." மிகவும் அடக்கமாக ஒருவர் கூறுகின்றார்.

"இதுக்கை என்னண்ணை இருக்கு ... ..."

"இண்டைக்கு ஆடிப்பிறப்பு ... ஆனையிறவிலை நிக்கிற எங்கடை பொடியள் வீட்டிலை நிண்டிருந்தால் ஆடிக்கூழ் குடிச்சிருப்பினம்... வீட்டிலை எதைச் செய்தாலும், ஆனையிறவிலை நிக்கிற எங்கடை பிள்ளையளின்ர நினைப்புத்தான் வருகுது... ..."

அந்த மூவரும் அங்கிருந்து செல்கின்றனர்...

சில நிமிடங்களில், காயப்பட்டவர்களை ஏற்றிச் சென்ற வான் திரும்பி வருகின்றது. அந்த மாணவன் கைகாட்டி அந்த வாகனத்தை மறிக்கின்றான்.

ஆடிக்கூழ் நிறைந்த சருவத்தை ஆனையிறவுக்கு அனுப்ப வேண்டியது பற்றிச் சாரதியிடம் கூறுகின்றான். சாரதி இறங்கிவந்து கதவைத் திறக்கின்றான்.

நானும் அந்த மாணவனும் சேர்ந்து அந்தச் சருவத்தைத் தூக்கி உள்ளே வைக்கப் போகின்றோம்...

உள்ளே...

கடலாமையை வெட்டி சதைகளை எடுத்தபின், வெறுமையான ஓட்டில் சிறிய சதைத் துண்டுகளும்", இரத்தமும் தேங்கிக் கிடப்பது போல... சதைத் துண்டுகளும் இரத்தமும் தேங்கிக் கிடக்கிறது...

நாங்கள் திகைத்துப் போய் நிற்கின்றோம். "கெதியாய் ஏத்துங்கோ..."

"சருவத்தை எங்கை வைக்கிறது..."

"சீற்றிலை வையுங்கோ..."

சீற்றில் சருவத்தை வைக்கிறோம்.

"அண்ணை இப்ப எத்தினை பேரைக் கொண்டு போனனீங்கள்..."

"ஒன்பது பேர்..."

"என்ன நடந்தது..."

"ஷெல் விழுந்தது..."

வான் புறப்படுகின்றது, அதே மின்னல் வேகம்!

"தம்பி...நான் அந்தச் சந்திக் கடைக்குப் போக வேணும்..."

"சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்துபோங்கோ..."

அங்கிருந்து புறப்பட்டு சைக்கிளையும் உருட்டிக் கொண்டு நடந்து சந்திக்கு வருகின்றேன்.

சந்தி வீட்டில் நிறையப் பெண்பிள்ளைகளும் சில பெற்றோரும் நிற்கின்றனர். அந்தப் பெண் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் அணிந்திருக்கும் உடுப்பு, அவர்கள் மாணவிகள் என்பதைக் காட்டுகின்றது.

அந்தக் கூட்டத்தில் கச்சேரியில் வேலை செய்கிற தங்கனும் அவனது மனைவியும் நிற்கின்றனர்.

அந்த வீட்டுக்குள் சென்று, தங்கத்தை அணுகுகின்றேன்.

"என்ரை மூத்தவள் ஆனையிறவுக்குப் போறாள்... அனுப்புறதுக்காக வந்தனம்...''

''இந்த நேரத்திலை பொம்பிளைப்பிள்ளையளை ஆனையிறவுக்கு அனுப்பிறது...மடைத்தனமான வேலை...''

''அவசியமெண்டாப் போகத்தானே வேணும், இந்தப் பிள்ளையளெல்லாம் அங்கைதான் போக நிக்கினம்...''

''அப்பிடி என்ன அவசிய அலுவல்...''

''ஆனையிறவு இராணுவத்தோடை அடிபாட்டில் நிக்கிற எங்கடை பொடியளுக்கு உதவி செய்யப் போகினம்...''

வீதி ஒழுங்கு பார்க்கும் மாணவர்கள்,...

போராளிகளுக்கு உதவி செய்ய போர் முனை நோக்கிச் செல்லும் மாணவிகள்...!

இதுகாலவரை நடந்த போராட்டங்களில், ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதல், மகோன்னதமான ஒரு புதிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளதை நான் உணர்கிறேன்.

(முற்றும்)

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது வீரர்களின் போர்த்திறன் அவர்களது நோக்கத்தைச் சிதறடித்தது. இப்போரில் எனக்கு காயப்படும் போராளிகளை மீட்டெடுக்கும் பணி வழங்கப்பட்டது. இப்பணியை என்னிடம் ஒப்படைத்த போது எமது மூத்த உறுப்பினர் ஒருவர் இவ்வாறு கூறினார் 'உலகத்தில் தமக்கென நாடில்லாமலிருந்த யூதர்கள் இஸ்ரேல் என்றொரு நாட்டை அமைத்திருக்கின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களது போர்த்திறனுடன் காயமடையும் தமது வீரர்களை துரிதமாக மீட்டெடுத்தமையும் அதனுடன் பராமரிக்கும் முறையும் சிறப்பானதாக இருந்ததே. அவர்களை நல்லமுறையில் கவனித்து வந்துள்ளதால் தான் அவர்களால் திறமையாகப் போரிடமுடிந்தது என்றார்.

அதுபோலவே இப்போர்க்களத்தில் ஷெல்விழாத இடம் என்று ஒன்றைக்கூட சொல்ல முடியாது அப்படியான ஒரு இடத்தையும் நான் காணவில்லை. இப்படியான சூழ்நிலையில் எப்படித்தான் எமது போராளிகள் காயமடைந்த இத்தனை வீரர்களை மீட்டெடுத்துக் கொண்டு வந்தார்களோ என நான் ஆச்சரியப்படுகிறேன். வெட்டவெளிப் பிரதேசத்தில் முதலாம் நாள் [illegible] படையினரை 50யார் கூட முன்னேற விடாமல் எமது வீரர்கள் உக்கிரமமாகப் போரிட்டனர். இரண்டாம், மூன்றாம் நாளிலும் எம்மில் பலர் வீரமரணமடைந்தும், காயமுற நேர்ந்தும் எமது தாக்குதலின் வேகம் மட்டும் குறையவில்லை. உதாரணமாக 20 பேருடன் சென்ற இளங்கோவன் என்ற குழுத் தலைவன் தன்னுடன் சென்ற அத்தனைபேரும் காயமடைந்த நிலையிலும் தளரவில்லை. தன்னை நெருங்கிய படையினரை எழுந்து நின்று சுடும் போதே அவன் வீரமரணமடைந்தான் என்று கூறினார்

போர்க்கள நிலைமை பற்றி மேலும் என்ன கூற விரும்புகின்றீர்கள் என்று கேட்ட போது 'இந்த யுத்தத்தில் காப்பரண்கள் இருந்திருந்தால் எமது போராளிகளின் இழப்பை கூடியளவு தவிர்த்திருக்கலாம்' பதுங்கு குழிகளை வெட்டி, சாக்குகளை வழங்கி மேலும் கூடுதலான அணைகள் பொதுமக்கள் ஒத்துழைத்திருந்தால் போராளிகளின் இழப்பும் கணிசமாகக் குறைந்திருக்கும் என்றார்.

வைத்தியசாலைக்கு வந்த பின்னர் இங்கு உங்களால் உணரமுடிந்தது என்ன?என்று கேட்டபோது 'முன்னர் ஒரு போராளி காயமடைந்தால் அவனது பெற்றோரோ, உறவினரோ, அல்லது தீவிரமான ஆதரவாளர்களோ தான் போராளிகளைப் பராமரிப்பதுண்டு. இப்போதோ எல்லாத் தரப்பு மக்களும் போராளிகளில் அக்கறையாக இருப்பதைக் காணமுடிகிறது பல்கலைக்கழக மாணவர்கள் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள், சாதாரண மக்கள் எல்லோருமே உணர்வுபூர்வமாக சேவையாற்றுவதை என்னால் காணமுடிகிறது: குறிப்பாக இங்குள்ள வைத்தியர்கள்; ஊழியர்கள் எல்லோரும் தேசப்பற்றுடன் கடமையாற்றுவதை அவதானிக்க முடிகிறது என்றார்.

பொதுமக்களுக்கு தாங்கள் விடுக்கும் செய்தி என்ன என்று கேட்டதற்கு ''விடுதலைப் புலிகளாக நாங்கள் எமது நோக்கத்தை அடைய ஒரே நோக்கில் அணிவகுத்து நிற்கிறோம் அதேபோல மக்களும் எம்முடன் அணிதிரண்டு நிற்க வேண்டும். புகையிரதம், ஓடுகிற தண்டவாளத்தை நேராக வைத்திருப்பதற்கு சிலிப்பர் கட்டைகளும், கல்லிகளும் எவ்வளவு உறுதுணையாக இருக்கின்றனவோ அது போலவே பொதுமக்களும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எமக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் உலக விடுதலைப் போராட்டங்களில் பல முனைகளில் பல முகாம்கள் இப்படித்தான் நீண்டகாலம் முற்றுகைக்குள்ளாகி வீழ்ச்சியடைந்துள்ளன இந்த முற்றுகையையும் எல்லாத் தரப்பு மக்களின் பங்களிப்புடன் நாம் வெற்றி கொள்ளலாம்.

இந்த விமானத் தாக்குதல்கள் எல்லாம் ஒரு குருட்டுத் தாக்குதல்களே இந்த விமானங்களின் தாக்குதல்களுக்கு மத்தியிலும் எம்மால் நிலையாக நின்று சண்டைபிடிக்கக் கூடியதாக இருக்கிறது எங்கள் நிலைகளில் இருந்து நாம் எழுந்து செல்லும் போது சில விமானக் குண்டுகளின் சிதறல்களில் எமது வீரர்கள் வீரமரணமடைந்திருக்கிறார்கள், காயமடைந்திருக்கிறார்கள்.

இந்த முற்றுகையில் நாம் வெற்றிகொள்ளலாம். இம்முற்றுகை தொடரும். எனவே பதுங்கு குழிகள் அமைத்துக் கொடுத்தல், வாகன வசதி செய்து கொடுத்தல், சாக்குகள் வழங்கல் போன்றவற்றில் முழுமையான தேசப்பற்றுடன் செயற்பட்டால் நாம் விரைவில் இம் முற்றுகையில் வெற்றி பெறலாம்: அப்படியான ஆதரவை மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு'' என்றார்.

க. பொ. த. உயர்தர பரீட்சை பாடநேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உ/த) பரீட்சை திட்டமிட்டபடி ஆகஸ்ட் மூன்றாம் திகதி நாடெங்கிலும் ஆரம்பமாகிறது யாழ் மாவட்டத்தில் 67 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது: இப்பரீட்சைக்குரிய பாடநேர அட்டவணை வருமாறு:-

03-08 91 சனிக்கிழமை

8-30 — 10-30
விலங்கியல் I
8-30 11-30
பிரயோக கணிதம் I
சரித்திரம் II

12-30 — 3-30
சரித்திரம் 1

05-08-91 திங்கட்கிழமை

8-30 ... 11-30
பிரயோக கணிதம் II
விலங்கியல் II
கிரேக்க உரோம நாகரிகம் I
சித்திரம் 1

12-30 ... 3-30
மனைப்பொருளியல் I
இலத்தீன் I

06-08-91 செவ்வாய்க்கிழமை

8-30 ... 11-30
தூயகணிதம் I
பௌத்தநாகரிகம் I

12-30 ... 3-30
மனைப்பொருளியல் II
இலத்தீன் II

07-08-91 புதன்கிழமை

8-30 ... 10-30
தாவரவியல் I
8-30 ... 11-30
புத்தசமயம் I
தமிழ் I

12-30 ... 3-80
தூயகணிதம் II
பௌத்தநாகரிகம் II

08-08-91 வியாழக்கிழமை

8-30 ... 11 30
தாவரவியல் ll
புத்தசமயம் ll
தமிழ் ll

12-30 .. 3-30
சங்கீதம் - சிங்களம் I
சங்கீதம் - கர்நாடகம் I
சங்கீதம் - மேலைத்தேயம் 1

09-08-91 வெள்ளிக்கிழமை

8-30 ... 10-30
இரசாயனவியல் I
8-30 ... 11-30
பொருளியல் 1
மலாய் 1
பேர்சிய மொழி 1
ஹிந்தி 1

1-30 .. 4-30
நாட்டியம் (சிங்களம் 1
நாட்டியம் (பரதம் 1
அரபு 1
ஜப்பானிய மொழி 1

10-08-91 சனிக்கிழமை

8-30 ... 11-30
இரசாயனவியல் ll
நாட்டியம் சிங்களம் ll
பரதம் ll
அரபு ll
ஜப்பானிய மொழி ll

12-30 ... 3-30
சங்கீதம் (சிங்களம்) ll
சங்கீதம் கர்நாடகம் ll
சங்கீதம் மேலைத்தேயம் ll

12 - 08 - 91 திங்கட்கிழமை

8 30 - 10 30
பௌதிகவியல் I
8 30 - 11 30
கணக்கியல் I
பாளி I

12 30 - 3 30
விவசாய விஞ்ஞானவியல் I
ஜேர்மன் I
ருஷியன் I
உருது I
சீனமொழி I

13 - 08 - 91 செவ்வாய்க்கிழமை

8.30 - 11.30
பௌதிகவியல் II
கணக்கியல் II
பாளி ll
ஜேர்மனி II
ருஷியன் II
உருது II
சீனமொழி II

12.30 - 3.30
விவசாய விஞ்ஞானவியல் II
கிரேக்க உரோமநாகரிகம் II

14 - 08 - 91 புதன்கிழமை

8 30 - 11.30
பொருளியல் II
மலாய் II
பேர்சிய மொழி II
ஹிந்தி II

12 30 - 3 30
சிங்களம் I

15 - 08 - 91 வியாழக்கிழமை

8.30 - 11.30
சிங்களம் II

12.30 - 3 30
இந்துசமயம் I
கிறிஸ்தவம் I
இஸ்லாம் I
சமஸ்கிருதம் I

16- - 08 – 91 வெள்ளிக்கிழமை

8 30 - 11 30
சித்திரம் II
ஆங்கிலம் I

1 30 - 4 30
இந்துசமயம் II
கிறிஸ்தவம் ll
இஸ்லாம் ll
சமஸ்கிருதம் ll

17 - 08 - 91 சனிக்கிழமை

8 30 - 11.30
சித்திரம் lll
ஆங்கிலம் ll

12 30 - 3 30
வர்த்தகமும் நிதியும் ll

19 - 08 - 91 திங்கட்கிழமை

8 30 - 11.30
புவியியல் l

12 30 - 3.30
வர்த்தகமும் நிதியும் ll

20 - 08 – 91 செவ்வாய்க்கிழமை

8 30 – 11.30
புவியியல் ll

12 30 - 3 30
இந்து நாகரிகம் l
இஸ்லாமிய நாகரிகம் l

21-09-91 புதன்கிழமை

8-30 - 11-30
புவியியல் lll

12.30 3 30
இந்துநாகரிகம் ll
இஸ்லாமிய நாகரிகம் ll

22-08-91 வியாழக்கிழமை

8.30 - 11 30
அரசியல் மூலதத்துவங்கள் l

12 30 - 3 30
அளவை விஞ்ஞானமுறை l

23-08-91 வெள்ளிக்கிழமை

8-30 ... 11-30
அரசியல் மூலதத்துவங்கள் 11

1-30 ... 4 30
அளவை விஞ்ஞானமுறை 11

26-08-91 திங்கட்கிழமை

8-30 — 11-30
கிரேக்கம் 1
பிரெஞ்சு 1

12-30 ... 3-30
நாடகமும் அரங்கியலும் 1

27-08-91 செவ்வாய்க்கிழமை

8-30 — 11-30
நாடகமும் அரங்கியலும் 11
கிரேக்கம் 11
பிரெஞ்சு 11

12-30 ... 2-30
நாடகமும் அரங்கியலும் 111

சண்முகம் மரணத்தைவிசாரிக்க நீதிபதி வர்மா அச்சம்

(டில்லி)

ராஜீவ்காந்தி கொலைபற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட நீதிபதி வர்மா ஆணைக்குழு தனது விசாரணை எல்லையை விஸ்தரிக்க மறுத்துவிட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி சவான் இன்று ராஜ்யசபையில் தெரிவித்தார்.

கொலையில் சம்பந்தப்பட்ட காவல் கைதி சண்முகம் காவலில் இருந்து தப்பியதும், பின்னர் மரணமடைந்ததும் குறித்து அவை உறுப்பினர்களுக்கு விளக்கம் அளித்துப் பேசிய உள்துறை அமைச்சர், ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரணை செய்ய வேறொரு நீதிபதியை நியமிக்க உச்ச நீதிமன்றத்தை அரசு அணுகியிருக்கிறது என்று தெரிவித்தார்.

வர்மா ஆணைக்குழு விசாரணையைத் தொடர்ந்து நடத்த ஒத்துக்கொண்டுள்ளதாகவும், புலனாய்வுப் பகுதி தொடர்பான விசாரணையை ஏற்கத் தயங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்:

காவற்கைதி சண்முகம் தப்பியதற்குப் பொறுப்பானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அவர் யாராக இருந்தாலும் தப்ப முடியாது என்றும் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

மத்திய புலனாய்வுப் பிரிவின் கூடுதல் இயக்குநர் சென்னையிலேயே இருப்பார் என்றும், சண்முகத்தின் தற்கொலை தொடர்பாக நீதிபதியின் விசாரணை நடக்கும் என்றாலும், சண்முகம் தப்பியதற்கும், பின்னர் மரணமுற்றதற்கும் யார் பொறுப்பு என்பதைக்கண்டறியுமாறு கூடுதல் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தியின் கொலையில் புலிகளின் சம்பந்தம் சந்தேகத்துக்கு இடமில்லாதது என்று குறிப்பிட்ட அமைச்சர், ராஜீவ்காந்தியைக் கொலை செய்யச் சர்வதேச சதி ஏதும் நடந்திருக்கும் என்பதையும் விசாரிக்க வேண்டியுள்ளது என்றார்.

ராஜீவ்காந்தி மூன்றாவது உலக நாடுகளின் பெருந்தலைவராக உருவாகிவந்ததை தட்டிக்கேட்பதற்கு யாருமில்லை என்று நினைத்த வல்லரசுகளின் வயிற்றிற்கு எரிச்சல் ஊட்டுவதாக இருந்திருக்கிறது என்றும், காந்தியின் கொலைக்குக் காரணமான சதிகாரர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் சவான் கூறினார்.

அரசாங்கம்

அரசாங்கம் ஒரு லொறியோடு நிறைந்த ஆயுத உதவிகள் வழங்கியதையிட்டு இராணுவ உயர் அதிகாரிகள் அதிருப்தியும், வேதனையும் அடைந்ததாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் ஆனையிறவு முகாமில் போராடும் இராணுவத்தினருக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகளைச் செய்வதில் அரசாங்கம் அக்கறை காட்டத் தவறியுள்ள அதே வேளை ஆடம்பரமான விழாக்களிலும், கேளிக்கைகளிலும் பெருந்தொகைச் செலவிடுவதாகவும் கூறினார். இதன் மூலம் அரசாங்கம் எப்போதும் வெற்றி பெற்றுவிட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நரசிம்மராவ்

தமது விஜயத்தை ரத்துச் செய்துள்ளார்.

இது தொடர்பாக புதுடில்லியில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பொன்றில் பிரதமர் சில அவசர அலுவல்கள் காரணமாக தமிழக விஜயம் பிற்போடப் பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது-

வீர வணக்கம்

விக்கொண்டார். அவரது புகழுடல் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் கோப்பாயிலுள்ள மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமானது.

ஒத்துழைக்குமாறு

கள் மக்கள் முன்னணி பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது:

இச் சேகரிப்பில் ஈடுபடும் மாணவ இயக்கத்தினருக்கு வட்டவை, சிற்றூரவை உறுப்பினர்களும், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள் போன்ற பொது நிறுவனங்களும் முழு ஒத்துழைப்பை வழங்குமாறும் வேண்டப்பட்டிருக்கிறது.

இவற்றை விட பதுங்குகுழி, காவல் அரண்களுக்கான சாக்கு, மண்வெட்டி போன்ற ஏனைய பொருட்களைச் சேகரிப்பதில் வட்ட அவை, சிற்றூரவை உறுப்பினர்களும், பொது நிறுவனங்களும் கூடிய கவனம் செலுத்தி ஈடுபடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கடற்படை

சடலம் வேலணைப் பாலத்திலும், இரண்டு சடலங்கள் சாட்டிப் பகுதியிலும் கரை ஒதுங்கியுள்ளன. இவற்றோடு தீவக கடற்கரைப் பகுதிகளில் கரை ஒதுங்கிய சடலங்களின் எண்ணிக்கை ஆறாக இருப்பதோடு மேலும் சில சடலங்கள் புங்குடுதீவு கடலில் ஆழமான பகுதியில் மிதந்து கொண்டிருப்பதாகவும் கடல் வற்றுக் காரணமாக இவை கரை ஒதுங்கவில்லை என்றும் கடற்பெருக்கின் போது இவை கரை ஒதுங்கும் எனவும் மீன் பிடிக்கச் சென்ற சிலர் தெரிவித்தனர்.

சிறிலங்கா கடற்படைப்படகொன்று புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி மூழ்கியதும் அதிலிருந்த கடற்படையினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (22

கூடுதல்

கலந்தாலோசித்து விட்டு எவ்வளவு அதிகரிப்பது என்று தீர்மானிக்கப்படும் என்றும் வர்த்தக அமைச்சர் தெரிவித்தார்.

சுதந்திர

ரீமான விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா கூறினார்

அவர் மேலும் பேசுகையில் ரஞ்சன் விஜேரத்தினா கொலைசெய்யப்பட்ட குண்டு வெடிப்பு கூட்டுப்படை தலைமையகத்துக்கு முன்பாக நடந்த குண்டு வெடிப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபட்ட வரதனுக்கு மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் புகலிடமளித்துள்ளார். இதே சந்திரசேகரனுடன் உள்ளூராட்சித் தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு வைத்திருந்தது. அன்னவர் முன்னணிக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக கொழும்பு வந்த போது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. உள்ளூராட்சி தேர்தல் பிரசாரத்திற்காக சந்திரசேகரனுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி நிதியுதவி செய்திருந்தது இந்த நிதியின் ஒருபகுதி விடுதலைப் புலிகள் ஆயுதம் கொள்வனவு செய்யப் பயன்பட்டது என்ற சந்தேகம் தற்போது எழுந்திருப்பதாக குறிப்பிட்ட அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா திரு. சந்திரசேகரனைப் பாதுகாக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி துடிப்பது ஏன் என்றும் வினா எழுப்பினார்.

எனக்கு

மாக இரண்டாயிரம் பேர் என்னுடன் இப்பகுதிக்கு வந்தனர்.

ஆனையிறவுப் படையினரை மீட்கவேண்டும் என்று தான் சொல்லப்பட்டதே தவிர இத்தனை நாள் திட்டத்தில் ஆனையிறவு போவதென்று தீர்மானிக்கப்படவில்லை என்றுதான் நினைக்கின்றேன்: இது சம்பந்தமாக மேலதிகமாக எனக்கு எதுவும் தெரியவில்லை திரும்பத் திரும்ப ஒன்றைமட்டும் உணர்த்தினர். ஆனையிறவுக்குப் போகவேண்டும் என்பதை என்றார்.

புலிகளின் எதிர்த்தாக்குதல் தொடங்கியதும் என்ன நினைத்தீர்கள்? என்று கேட்டபோது புலிகளின் போர்த்திறனை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இவ்வளவு கடுமையாக இருக்கும் என நான் நினைக்கவில்லை ஒரு கட்டத்தில் எனக்கு இனி மீட்சி இல்லை என்றே நான் நினைத்தேன் வெடிவாங்கிய அனைவரும் திரும்பி ஓடிய வேகத்தைப் பார்க்கும் போது எனது பயம் மேலும் அதிகரித்தது என்றார்.

உங்கள் குடும்பத்தினருக்கு நீங்கள் புலிகளிடம் பிடிபட்டது தெரியுமா? என்று கேட்டபோது இது சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் வீட்டிற்கு செய்தியனுப்பியுள்ளேன் இதிலிருந்து என்னை மீட்டெடுக்க முயற்சிக்குமாறு கேட்டிருக்கிறேன் என்றார் வேறு எவருக்கும் தகவல் அனுப்பவில்லையா? என்று கேட்டபோது எனது காதலி நிரோஷாவுக்கு தகவல் அனுப்பவேண்டும். ஆனால் இன்னும் அனுப்பவில்லை என்றார் காதலிக்கு எத்தனை வயது என்று கேட்டதற்கு 17 என்று பதிலளித்தார் உபாலிசிரிப்புடன் உங்களுக்கு எத்தனை வயது? என்று கேட்டதற்கு 01 - 10 - 1966 இல் பிறந்தேன். இப்போது 25 வயது என்றார்.

காவிரி

வேற்றியது குறித்து லோக்சபையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

பிரதமமந்திரி உடனடியாகத் தலையிட்டுக் கர்நாடக அரசு நடுவர்மன்ற ஆணையை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் என்று இவர்கள் கோரினார்கள். பிரதமர் உடனடியாகச் சபைக்குவந்து இது தொடர்பாக அறிக்கை வெளியிட வேண்டும் என்று கோரினார்கள். சுமார் அரைமணி நேரம் நிழ்ந்த குழப்பத்துக்குப் பின் தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ், அ. இ. அ. திராவிடமுன்னேற்றக்கழகம், தி. மு. க உறுப்பினர்கள் ராஜ்யசபையில் இருந்து வெளிநடப்புச் செய்தார்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.